**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT No.I, THANJAVUR.**
**C.C.No. 369/2022**
**U/s. 294(b),324,342,506(2)IPC**
**PROSECUTION WITNESS NO. 2 (Additional Witness No.1 )**

| | |
|---|---|
| **Name** : திரு. குணசேகரன் | |
| **Father's/Husband Name :** | **Occupation :** |
| **Address** : | **Age : /2026** |

**3** வது எதிரி ஆஜர்**. (1,2** வது எதிரி **Split up CC No.191/2026** ல் பிடிகட்டளையில் உள்ளார்**)**
**என்னால் சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டது திரு. பரத் , பெஞ்ச் கிளார்க் . செல்வி, வி, சௌந்தர்யா , தட்டச்சர்.**

## <u>C.C.No. 369/2022 26.05.2026</u> விசாரணை ஆரம்பிக்கும் நேரம்:

**<u>முதல் விசாரணை:</u>**

1, நான் தஞ்சாவூர் நகர கிழக்கு காவல் நிலைய சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். இவ்வழக்கின் விசாரணை அதிகாரிகளான திரு. குமார் மற்றும் திரு. சத்தியன் உதவி ஆய்வாளர் வேறு அலுவல் பணியில் உள்ளதால் நீதிமன்றத்திற்கு வர இயலவில்லை. அவர்கள் கையெழுத்து நன்றாக தெரியும் என்பதால் ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன். கடந்த 04.06.2022 ம் தேதி 21.00 மணியளவில் தலைமை காவலர் திரு. கணேசன் நிலைய பொறுப்பிலிருந்தபோது தஞ்சாவூர் மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சையிலிருந்த பிரசாந்த் என்பவரின் காய தகவலை பெற்று , அப்பால் மருத்துவமனை சென்று அங்கு உள்நோயாளியாக சிகிச்சையிலிருந்த அவரிடம் நடந்த சம்பவத்திற்கு புகார் வாக்குமூலம் பெற்று அப்பால் நிலையம் வந்துஅதன் தன்மைக்கேற்ப நிலைய குற்ற எண். 660/2022 சபி. 294(b), 324, 506(ii) இதசவின் படி வழக்கு பதிவு செய்துள்ளார். பின்பு அசல் புகார் மனுவையும், முதல் தகல் அறிக்கையும், கனம் குற்றவியல் நடுவர் நீதித்துறை எண் 1 அவர்களுக்கு அனுப்பி வைத்தும், வழக்கின் மற்றொரு நகலை சம்மந்தப்பட்ட காவல் உயர் அதிகாரிகளுக்கு அனுப்பியும், விசாரணையின் ஒரு நகலை உதவி ஆய்வாளர் பார்வைக்கு வைத்தார். **காயத்தகவல் அசாஆ 2 , புகார் அசாஆ 3 , முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ. 4 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.**

2. பின்பு உதவி ஆய்வாளர் திரு. குமார் அவர்கள் வழக்கினை தனது புலன் விசாரணைக்கு எடுத்து கொண்டு 04.06.2022 ம் தேதி காலை 22.00 மணியளவில் சம்பவயிடத்திற்கு சென்று அங்குள்ள சாட்சிகள் கார்த்திக் , ஜெயராமன் ஆகியோர் முன்னிலையில் பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார். **பார்வை மகஜர் அ.சா.ஆ. 5, மாதிரி வரைபடம் அ.சா.ஆ. 6 ஆகும்**.

பின்பு மகஜர் சாட்சிகள் மற்றும் இதர பசா1 முதல் பசா5 வரையானவர்களை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். பின்பு அவர் வழக்கினை மேல்கட்ட விசாரணைக்காக உதவி ஆய்வாளர் திரு. சத்தியன் பார்வைக்கு வைத்தார்.

3. பின்பு எதிரியை தேடி வந்த நிலையில் கிடைத்த ரகசிய தகவலின் படி 10.09.2022 ம் தேதி தஞ்சை கரந்தை கீரைக்காரக்தெரு, பத்துகட்டு சர்ச் அருகில் நின்று கொண்டிருந்த இவ்வழக்கின் எதிரி அர்ஜீன் போலீஸ் பார்டிகளை கண்டதும் ஓட முயன்றவரை பிடித்து விசாரித்தபோது அவர் தாமாக குற்றத்தை ஒப்புகொண்டார். பின்பு அவரை காரணம் கூறி கைது செய்து, பின்பு 1 வது எதிரி தாமாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தினை சாட்சிகள் மணிகண்டன் , குருபிரசாத் ஆகியோர் முன்னிலையில் பதிவு செய்தும், 1 வது எதிரி எடுத்து ஆஜர் செய்த 42 செமீ நீளமுள்ள அரிவாள் –1 பூனுடன் கூடிய கைப்பிடி ஆகியவற்றை அதே சாட்சிகள் முன்னிலையில் கைப்பற்றுதல் மகசரில் கைப்பற்றியும், பின்பு எதிரி மற்றும் வழக்கு சொத்துகளுடன் நிலையம் வந்து திரேக பரிசோதனை செய்து நிலைய பாராவசம் ஒப்படைத்து தக்க வழிக்காவல் மூலம் நீதிமன்ற காவலுக்கு உட்படுத்திள்ளார். வழக்கு சொத்தினை நீதிமன்ற பாதுக்காபப்பு படிவம் 91 மூலம் அனுப்பி வைத்துள்ளார். 1 வது **எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி அசாஆ 7, கைப்பற்றுதல் மகசர் அசாஆ 8 , படிவம் 91 அசாஆ 9 , 42 செமீ நீளமுள்ள அரிவாள் –1 (சபொ1) ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

4. பின்பு 2 வது எதிரி திவாகர் (எ) அந்நியன் திவாகர் 09.10.2022 ம் தேதி தஞ்சை கரந்தை கீரைக்காரக்தெரு, பத்துகட்டு சர்ச் அருகில் நின்று கொண்டிருந்த இவ்வழக்கின் எதிரி போலீஸ் பார்டிகளை கண்டதும் ஓட முயன்றவரை பிடித்து விசாரித்தபோது அவர் தாமாக குற்றத்தை ஒப்புகொண்டார். பின்பு அவரை காரணம் கூறி கைது செய்து, எதிரியை நிலையம் வந்து திரேக பரிசோதனை செய்து நிலைய பாராவசம் ஒப்படைத்து தக்க வழிக்காவல் மூலம் நீதிமன்ற காவலுக்கு உட்படுத்திள்ளார். பின்பு 3 வது எதிரி மணிகண்டன் 20.10.2022 ம் தேதி தஞ்சை கரந்தை கீரைக்காரக்தெரு, பத்துகட்டு சர்ச் அருகில் நின்று கொண்டிருந்த இவ்வழக்கின் 3 வது எதிரி போலீஸ் பார்டிகளை கண்டதும் ஓட முயன்றவரை பிடித்து விசாரித்தபோது அவர் தாமாக குற்றத்தை ஒப்புகொண்டார். பின்பு அவரை காரணம் கூறி கைது செய்து, எதிரியை நிலையம் வந்து திரேக பரிசோதனை செய்து நிலைய பாராவசம் ஒப்படைத்து தக்க வழிக்காவல் மூலம் நீதிமன்ற காவலுக்கு உட்படுத்திள்ளார்.

5. பின்பு உதவி ஆய்வாளர் திரு. சத்தியன் அவர்கள் பசா 1முதல் பசா 5 வரையானவர் உதவி ஆய்வாளர் திரு. குமார் அவர்களிடம் கூறிய தகவலையே கூறியதால், அவர் புதிததாக வாக்குமூலம் எதுவும் பதிவு செய்யவில்லை. உதவி ஆய்வாளர் திரு, சத்தியன் அவர்கள் பசா6 முதல் பசா 9 வரையானவர்களை தனிதனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார்.

6. பின்பு இவ்வழக்கில் காயம்பட்ட வாதிக்கு சிகிச்சையளித்த மருத்துவர்களான திரு. கரிகாலன், திரு.கார்த்திகேயன் ஆகியோர்களை விசாரித்து தனித்தனியே வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். **காயசான்று அ.சா.ஆ. 10 ஆகும்**.

7. பின்பு இவ்வழக்கில் தனது புலன் விசாரணை முடித்து கொண்ட உதவி ஆய்வாளர் அவர்கள் சாட்சிகளின் வாக்குமூலங்களின் இருந்தும், தனது புலன் விசாரணையிலிருந்தும் மேற்படி எதிரிகள் குற்ற சம்பவத்தில் ஈடுபட்டது உண்மை என தெரியவந்ததால் எதிரிகள் மீது மேற்படி இதச பிரிவுகளின் படி 13.12.2022 ம் தேதி குற்ற இறுதி அறிக்கை தயார் செய்து நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார்.

**<u>3 வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

நான் ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிதான். நான் சொல்வது போல் சம்பவம் எதுவும் நடக்கவில்லை என்றாலும், சம்பவயிடத்தில் பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்யவில்லை என்றால் சரியல்ல. இவ்வழக்கின் ஆவணங்கள் அனைத்தும் காவல் நிலையத்தில் வைத்து பின்னிட்டு தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. காவல் நிலைய புள்ளிவிவர கணக்கிற்காக வீட்டிலிருந்த எதிரியை விசாரணைக்காக அழைத்து வந்து பொய்யாக வழக்கு போடப்பட்டது என்றால் சரியல்ல. சொன்ன நாள் நேரத்தில் எதிரியை கைது செய்யவில்லை என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

<u>இத்துடன் குறுக்கு விசாரணை முழுமையாக நிறைவு பெற்றது.</u>

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல தட்டச்சருக்கு என்னால் சொல்லப்பட்டு. தட்டச்சு செய்யப்பட்டு. சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பாக சாட்சி கையெழுத்து செய்தார்.

**ஒப்பம்** - S.T. **கனிமொழி**.,
நீதித்துறை நடுவர் எண்–I,
தஞ்சாவூர்.